# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 14.05.2018-ம் தேதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற அவசரக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01) :-** இந்நகராட்சியில் குத்தகை பிரிவில் 144 கடைகளுக்கு 01.4.2018 முதல் குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்க வேண்டி உள்ளது. இதற்கான முன்மொழிவுகள் தயார் செய்து கொடுக்க ஆவணங்கள் நகல் எடுத்து கொடுத்ததும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கவும், மேலும் அனைத்து குத்தகை உரிமைதாரர்களுக்கு நோட்டீஸ் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் தயாரித்து வழங்கவும், புத்தக வடிவில் தயார் செய்யவும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.15000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்

2) அவ்வப்போது முன்மொழிவுகள் தயார் செய்யவும், புத்தகவடிவில் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அளிக்க வேண்டியுள்ளதின் அவசியத்தை கருத்தில் கொண்டு செலவினம் மேற்கொள்ளபட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1924/2014/அ1

**பொருள் எண்.02) :-** இந்நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்த திரு. எம்.நரசிம்மன் என்பவர் ஆற்காடு JM நீதித்துறை நடுவர் அவர்களின் முன்னிலையில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டார் என காவல் ஆய்வாளர், இராணிப்பேட்டை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது சம்மந்தமாக இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முதல் தகவல் அறிக்கையின்நகல் படி திரு. எம்.நரசிம்மன், ஓட்டுநர், 25.09.2014 பிற்பகல் முதல் அன்னாரின் மீதான குற்றச்சாட்டுகளின் மீது விசாரணை நிலுவையில் வைத்து தற்காலிக பணி நீக்கம் செய்து உத்திரவிடப்பட்டது. தற்கால பணி நீக்கத்தினை ரத்து செய்யவும் , மீண்டும் பணி வழங்க கோரியும் நகராட்சி ஆணையாளரை முதல் பிரதிவாதியாக சேர்த்து ( வழக்கு எண். W.P.No. 17171 / 2017) ல் திரு. எம். நரசிம்மன் , ஓட்டுநர் (தற்காலிக பணிநீக்கம்) என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் திரு.எம்.நரசிம்மன் ஆற்காடு என்பவரின் பணிநீக்க உத்தரவை மறுபரிசீலனை செய்து மீண்டும் பணி வழஙகிட விசாரணை அலுவலரை நியமித்து துறை ரீதியாக விசாரணை மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியின் நகரமைப்பு அலுவலரை விசாரணை அலுவலராக நியமித்து 10.01.2018 அன்று விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்க ஏதுவாக சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு அரசு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டது. இதன்படி சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.T.N. இராஜகோபாலன் (Government Pleader) அவர்களால் 17.03.2018 அன்று சட்ட கருத்துரு வழஙகப்பட்டுள்ளதற்கு வழக்கறிஞரின் கட்டணமாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. இதன்படி சட்டக்கருத்துரு கட்டணம் ரூ.5,000/- ஐ வழக்கறிஞர் திரு.T.N. இராஜகோபாலன், அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.3646/2012/சி1**

**அ.கு:–** இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மற்றும் நிர்வாக நலன் கருதி, அவசர அவசியத்தை முன்னிட்டு தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் ரூ.5000/- ஐ திரு.T.N.Rajagopalan, Government Advocate Chennai -600 104. அவர்களுக்கு வழஙகியதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

**பொருள் எண்.03) :-** இந்நகரமன்ற தீர்மானம் எண்.655, நாள்.31.10.2017–ல் அனுமதி அளிக்கப்பட்டதினை தொடர்ந்து பி.டி.ஈஸ்வரன் கட்டிடத்தில் உள்ள கடை எண்.1ல் மின்சாதன வசதிகள் செய்யும் பணிக்கு ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு.எ.கே.சர்தார்பாஷா | 9,324/– |
| 2 | திருமதி.டி.மாலதி | 9,552/– |
| 3 | திருமதி.பி.ஹயாதி பீ | 9,819/– |

**அ.கு:– 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எ.கே.சர்தார்பாஷா ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்குமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.04) :-** தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு நிதி 2018-2019ன் (Tamilnadu Urban Road Infrastructure Fund 2018-2019) கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:19- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி -1, வார்டு எண்:18- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி -2, வார்டு எண்:3-தேவி நகர், வார்டு எண்:13-சீத்தாராமன் தெரு, வார்டு எண்:1,பெரிய அசன்புரா தெரு, மற்றும் வார்டு எண்:23- பெரிய தண்டுகாரன் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் பணியினை மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-05 அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அ.கு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.05) :-** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21.03.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சொத்துவரி கேட்புக்கு ஏற்றவாறு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் 14640 சொத்துவரி கேட்புகள் உள்ள நிலையில் தற்போது வரை 7552 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சியில் கூடுதலாக 6304 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டுமென குறியீடு நிர்ணயம் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி, தெருவில் உள்ள பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து 6304 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகள் (Internal Plumbing of Water Supply House Service Connections) வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.211.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:–

1. அனுமதிக்கலாம்.
2. மதிப்பீடு தொகை ரூ.211.00 இலட்சத்தை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணி மேற்கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1494/2018/இ1).

**பொருள் எண்.06) :-** ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் (சுவச் பாரத் மிஷன்) கீழ் இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு உபயோகத்திற்காக பேட்டரி மூலம் இயங்கும் முச்சக்கரவாகனங்கள் 20 எண்ணம் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.46.00 இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், நகராட்சி ஆணையர், சென்னை–05 அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1523/2018/இ1

**ஆற்காடு**
**நாள்: 14.05.2018**

**தனி அலுவலர்,**
**ஆற்காடு நகராட்சி**